# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 228/நகராட்சி/2018

நாள் : 22/02/2019

**07.11.2018 நாளிட்ட**
**நக்கீரன் வார இதழ் செய்தி** – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது

**நகராட்சி ஆணையர்**
**சிதம்பரம் நகராட்சி.** – எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் ரூபாய் 77 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் பாதாளச் சாக்கடை விரிவாக்கப்பணிகள் குறித்து " இடிப்பதற்காக கட்டுகிறார்களோ " என்ற தலைப்பில் 07.11.2018 நாளிட்ட நக்கீரன் வார இதழில் செய்தி வெளியாகி இருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை, இம்முறைமன்ற நடுவம் தாமாகவே 228/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து சிதம்பரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. சிதம்பரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட மணலூரில் கட்டப்படும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளில் ஊழலும் முறைகேடுகளும் தலைவிரித்தாடுவதாக மாவட்ட ஆட்சியருக்கு புகார்கள் வந்த நிலையில், அக்கட்டுமானப் பகுதியினை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டு சிதம்பரம் நகராட்சி ஆணையரையும், பாதாளச் சாக்கடை திட்ட அதிகாரிகளையும் கடிந்து கொண்டதாக 07.11.2018 நாளிட்ட நக்கீரன் வார இதழில் செய்தி வெளியாகி உள்ளது. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படுவதால், அவ்வாரியத்தின் திண்டிவனம் மேற்பார்வை பொறியாளரிடமிருந்து அறிக்கையினைப் பெற்று சமர்ப்பித்துள்ளார். நக்கீரன் வார இதழில் குறிப்பிடப்பட்டுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருவதால், அத்திட்டம் சம்பந்தமான முறைகேடுகளை இம்முறையன்ற நடுவம் விசாரணை மேற்கொள்ள இயலாது. எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 22-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

நகராட்சி ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி